செ. கு. எண்:42 நாள்: 19.02.2021

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்களின் அறிக்கை – 19.2.2021

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தடுப்பதற்காக, மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 25.3.2020 முதல் ஊரடங்கு உத்தரவு பல்வேறு தளர்வுகளுடன் அமலில் இருந்து வருகிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு, இந்த நோய்த் தொற்றிலிருந்து மக்களை காத்து அவர்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்கி, முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் சிறப்பான செயல்பாட்டினாலும், பொதுமக்களின் ஒத்துழைப்பினாலும், நோய்த் தொற்று கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

பொதுமக்களின் நலன் கருதி, ஊரடங்கு உத்தரவை அமல்படுத்தியதுடன், தமிழ்நாடு பொது சுகாதார சட்டம் – 1939 மற்றும் தொற்று நோய் சட்டம் – 1897 ஆகிய சட்டங்களின் கீழ் பல்வேறு கட்டுப்பாடுகளையும் தமிழ்நாடு அரசு அறிவித்தது.

இதனையடுத்து காவல்துறையினர், மாநிலம் முழுவதும் ஆங்காங்கே சோதனைச்சாவடிகள் அமைத்தும், வாகன தணிக்கை செய்தும் ஊரடங்கை முழுமையாக அமல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டனர். மேலும், ஊரடங்கு உத்தரவை மீறியவர்கள், கொரோனா நோய்த் தொற்று தொடர்பாக வதந்திகளை பரப்பியவர்கள், உண்மைக்கு மாறான செய்திகளை பரப்பியவர்கள் ஆகியோர் மீது சட்டப்படியாக நடவடிக்கைகள் மேற்கொண்டனர்.

இது தொடர்பாக, மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளுள், வன்முறையில் ஈடுபட்ட குற்றங்களுக்காக பதிவு செய்யப்பட்ட வழக்குகள், முறைகேடான வழிகளில் இ–பாஸ் பெற்று பயன்படுத்திய குற்றங்களுக்கான வழக்குகள் மற்றும் காவல் துறையினரை பணி செய்யவிடாமல் தடுத்தது

தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்குகள் போன்றவற்றைத் தவிர மற்ற **அனைத்து வழக்குகளிலும் மேல் நடவடிக்கைகள், பொதுமக்களின் நலன் கருதி கைவிடப்படுகின்றன.**

மேலும், மத்திய அரசு, **1955**ம் ஆண்டு இயற்றப்பட்ட குடியுரிமை சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளும் வகையில், குடியுரிமை திருத்த மசோதா– **2019**ஐ கடந்த **10.12.2019** அன்று மக்களவையிலும், **11.12.2019** அன்று மாநிலங்களவையிலும் நிறைவேற்றியது.

இதனையடுத்து சில அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், பல இடங்களில் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர். இப்போராட்டங்களின் போது சட்ட ஒழுங்கை பராமரிக்க காவல் துறையினர் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து வழக்குகளை பதிவு செய்தனர்.

இவ்வழக்குகளுள், வன்முறையில் ஈடுபட்ட குற்றங்களுக்காக பதிவு செய்யப்பட்ட வழக்குகள் மற்றும் காவல் துறையினரை பணி செய்யவிடாமல் தடுத்தது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்குகள் போன்றவற்றைத் தவிர, **மற்ற அனைத்து வழக்குகளிலும் மேல் நடவடிக்கைகள் பொதுமக்களின் நலன் கருதி கைவிடப்படுகின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.**

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**